நாள் 25.06.2024.

அசல் வழக்கு எண் 133/2023

வா சா 1 சிதம்பரம், த/பெ சுடலைமுத்து

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால், என்னுடைய இடத்தில் மீனாட்சி என்பவர் இருக்கிறார் அவரை காலி செய்வதற்கு வழக்கு போட்டுள்ளேன். என்னுடைய சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 287 ல் இருக்கிறது எந்த கிராமத்தில் உள்ளது என்றால் தேவநல்லூர் கிராமத்தில் உள்ளது. பிராதில் எனக்கும் எனது சகோதரர் இசக்கியப்பனும் 2018 ல் வாய்மொழி பாகம் செய்து கொண்டதாக சொல்லியுள்ளோம் எங்கு வைத்து யார் முன்னிலையில் பாகம் ஏற்பட்டது என்றால், நான் குடியிருக்கும் வீட்டில்ீ வைத்துதான் பிரித்ீதுக்கொண்டோம். அப்போது எங்களுடன் யார் இருந்தார்கள் என்றால், யாரும் இருக்கவில்லை. எப்படி பிரித்துக்கொண்டோம் என்றால், அண்ணனுக்கு மேல் பகுதியும் எனக்கு கீழ்பகுதியும் என பிரித்துக்கொண்டோம். அது மொத்தம் எவ்வளவு இடம் என்றால் 8 1/4 சென்ட் ஆகும். சொத்தில் எத்தனை வீடு உள்ளது என்றால் 2 வீடு உள்ளது. மேல் பக்கம் வீடு எனக்கும் கீழ் பக்கம் வீடு எனது அண்ணனுக்கும் என்று சொல்லுகிறேனா என்றால் ஆமாம். அந்த வீடுகளுக்கு கதவு எண் 5/116 மற்றும் 5/117 என்றால் சரிதான். எனக்கு எத்தனையாவது கதவு எண் வீடு என்றால், 5/116 வீடு என்னுடையது. நான் எனது மகனுக்கு ஏற்படுத்தியுள்ள 08.06.2020

தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி கதவு எண் 5/116 வீட்டை முழுமையாக எழுதிக்கொடுத்திருக்கிறேனா என்றால் ஆமாம். நான் மொத்த சொத்தில் பிரிவின்றி பாதி பாகத்தைதான் எனது மகனுக்கு எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். பிரதிவாதி குடியிருக்க வீடு இல்லாமல் இருந்ததாகவும் அவரை வீட்டை பராரிப்பதற்காக வேண்டி வீட்டில் குடியிருக்க அனுமதித்தாக சொல்லியுள்ளேன் அது எந்த கதவு எண் கொண்ட வீட்டில் குடியிருக்க அனுமதித்தேன் என்றால், கதவு எண் 5/116 வீட்டி்ல் குடியிருக்க அனுமதித்தேன். எவ்வளவு நாட்களாக அந்த வீட்டில் அவர்கள் குடியிருக்கிறார்கள் என்ாறல் 8 வருடமாக குடியிருக்கிறார்கள். வாடகை உண்டா என்றால், வாடகை கிடையாது. உறவினர் என்பதால் வாடகை இல்லை. பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால், எனது அண்ணன் மனைவி ஆகும். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் தபசில் சொத்தில் உள்ள வீட்டில் என்றால் ஆமாம். அதே போன்று பிரதிவாதியின் கணவரும் அதே வீட்டில்தான் பிறந்து வளர்ந்தார் என்றால் ஆமாம். நான் பிறப்பதற்கு முன்பே தபசில் சொத்தில் வீடு இருக்கிறதா என்றால், ஆமாம் வீடு இருக்கிறது. பிராது சொத்தில் உள்ள வீடு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. எனது அப்பாவிற்கு பத்திரம் பட்டாவோ கிடையாது என்று சொன்னால் சரிதான். எனது அப்பாவின் பெயர் என்ன என்றால் சுடலைமுத்து ஆகும். எனது அம்மா பெயர் என்ன என்றால், பிச்சம்மாள் ஆகும். பிச்சம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், ஒரு பெண் இரண்டு ஆண். எனது அம்மா உயிருடன்இருக்கிறாரா என்றால் இருக்கிறார்.

எனது சகோதரி பெயர் அருணாசலம் அவர் இறந்துவிட்டார். நான் வாய்மொழியாக பாகம் பிரித்த சொத்திற்குதான் வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் ஆமாம். எனது அப்பா சுடலைமுத்துவின் முதல் மனைவி பெயர் என்ன என்றால் சிதம்பரம் ஆகும். முதல் மனைவி இறந்த பிறகுதான் எனது தாயாரை எனது தந்தை திருமணம் செய்துள்ளாரா என்றால் ஆமாம். சிதம்பரத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அது எனக்கு தெரியாது. சாட்சி மறுபடியும் ஒரு மகனை எனக்கு தெரியும் என்றும் அவர் பெயர் இசக்கி என்று கூறினார். அவரும் இறந்துவிட்டார். இசக்கியின் மனைவிதான் பிரதிவாதி மீனாட்சி என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கில் என்ன பதில், என்ன ஆவணம் போட்டுள்ளார் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், தெரியவில்லை. தபசில் சொத்தில் இரண்டு வீடுகள் உள்ளது அதில் ஒரு வீட்டில் எனது சகோதரர் இசக்கியப்பனும், மற்றொரு வீட்டில் பிரதிவாதியும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். கதவு எண் 5/116 க்கு வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால், எனது அம்மா பெயரில் உள்ளது. கதவு எண் 5/117 வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் அதுவும் எனது அம்மா பெயரில்தான் உள்ளது. இரண்டு வீட்டிற்கும் தீ◌ர்வை செலுத்தி ரசீது பெற்று வருகிறேனா என்றால், ஒரு வீட்டிற்கு நா◌னும் மற்றொரு வீட்டிற்கு எனது அண்ணனும் தீர்வை செலுத்துகிறோம். நான் தீர்வை செலுத்தும் வீடான கதவு எண் 5/116 எனது தாயார் பெயரில்தான் நான் தீர்வை செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். ஆரம்பத்தில் தபசில் சொத்தில் ஒரு வீடுதான் இருந்தது என்றால் சரிதான். ஒரு வீடாக இருந்தபோது கதவு எண் 5/38 ஏ என்றால் சரிதான். அந்த பழைய கதவு

எண்ணிற்குதான் மின் இணைப்பு இருக்கிறது என்றால் சரிதான். அதற்கு மின் இணைப்பு எண் 343 என்றால் சரிதான். மற்றொரு வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு கிடையாது என்றால் சரிதான். பழைய கதவு எண் 38 ஏ கொண்ட வீட்டிற்கு புதிய கதவு எண் 117 என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி வழக்கு சொத்து அவரது தாயார் சிதம்பரத்தை பெற்ற தாயார் சந்தானத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லுகிறார் என்று சொன்னால் அது தவறு. எனது தகப்பனார் சுடலைமுத்து அவருடைய மனைவிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 10.02.1984 தேதிய உயில் மூலம் பிரதிவாதியின் கணவர் இசக்கிக்கு பாத்தியப்படுத்தி வைத்திருக்கிறார் என்றால், அவ்வாறு இல்லை. அந்த உயிலில் 2 ம் தார மக்களான எங்களுக்கு தாவா இடத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். கதவு எண் 5/117 வீட்டிற்கு பிரதிவாதியின் கணவர் இசக்கி பெயரில்தான் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு ரசீதுகள் உள்ளது என்று சொன்னால் இல்லை. எனது தாயார் பெயரில்தான் உள்ளது. கதவு எண் 5/117 வீட்டில்தான் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவரும் ஒரு மகனும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் ஒரே மகளை திருமணம் செய்துகொடுத்துவிட்டார் என்றால்சரிதான். பிரதிவாதி மட்டும் ஒரே ஆளாக கதவு எண் 5/117 வீட்டில் வசித்து வருகிறார் என்றால சரிதான். நான் எனது அண்ணன் இசக்கியப்பனை விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால், இல்லை. நான் அழைத்தார் அவர் வரமாட்டார் நா'ன் சொல்லுவதை கேட்கவும் மாட்டார். என் பெயரிலும் அண்ணன் பெயரிலும் ஏற்பட்ட

தவறான பட்டாவை வைத்து நான் கட்சி செய்கிறேன் ் எனறாலும் தபசில் சொத்தில் எனக்கும் எனது அண்ணனுக்கும் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆரம்பத்தில் இசக்கியப்பனுக்கும் பிரதிவாதியின் கணவர் இசக்கிக்கும் சொத்தில் பாகம் கேட்டு ஒரு வழக்கு அறிவிப்பு அனுப்பினா என்றால் அனுப்பவில்லை. அதற்கு பிரதிவாதியின் கணவர் இசக்கி வழக்கறிஞர் மூலம் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. தபசில் சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால், எனக்கு தெரியவில்லை. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. நான் கூறும் பட்டா மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படத்தக்கதல்ல என்றுசொன்னால் சரியல்ல. நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால், உடவன்குளம் ஊரில் வசித்து வருகிறேன். எத்தனை வருடமாக அங்கு வசிக்கிறேன் என்றால் 2 வருடமாக அங் கு வசிக்கிறேன். அதற்கு முன்பு எங்கு வசித்தேன் என்றால் ஊரில் வசித்தேன். எனது ஆதார் அட்டையும் குடும்ப அட்டையும் எந்த விலாசத்தில் உள்ளது என்றால் உடவன்குளம் விலாசத்தில் இருக்கிறது. மீனாட்சி திருமணம் ஆன காலம் முதல் தாவா சொத்து உள்ள கதவு எண் 5/117 வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றா் சரிதான்.